முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S. No.36/2019

2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் நாள் புதன்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன் படி பிரமாணம் செய்விக்கப்பட்டது,

**வா.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இந்திரா | ஜாதி | |
| கணவர் பெயர் | ரெத்தினசாமி | மதம் | |
| கிராமம் | திருத்துறைப்பூண்டி | தொழில் | |
| வட்டம் | திருத்துறைப்பூண்டி | வயது | 47 |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன்.

1) 08.01.2013 தேதியிட்ட நானும் சொக்கலிங்கமும் தாவா சொத்தை கூட்டாக பெற்ற கிரய சாசனம் சார் பதிவக சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1**.
2) 28.03.2018 தேதியிட்ட நானும் சொக்கலிங்கமும் சேர்ந்து 4-ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த அடமான கடன் பத்திரம் சார் பதிவக சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2**.
3) கும்பகோணம் இசைவு தீர்ப்பாய நீதிபதியிடமிருந்து எனக்கு

அனுப்பப்பட்ட அழைப்பாணை அசல் **வா.சா.ஆ.3**.

4) 10.06.2019 தேதியிட்ட 1-ம் பிரதிவாதிக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.4**.

5) 13.06.2019 தேதியிட்ட மேற்படி அறிவிப்பை 1-ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புல் அட்டை அசல் **வா.சா.ஆ.5**.

6) 04.10.2019 தேதியிட்ட 4-ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட கடன் கணக்கு உண்மை நகல் **வா.சா.ஆ.6**.

7) 13.10.2019 தேதியிட்ட தாவா சொத்தின் சந்தை வழிகாட்டி மதிப்பு இணையதள நகல் **வா.சா.ஆ.7**.

தாவாபடி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை (3-ம் பிரதிவாதி தரப்பில்)**

3-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவாரூர்.